Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.395/2019

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.குருராகவேந்திரன் | Occupation | இன்ஸ்யூரன்ஸ் |
| Father’s name | சுந்தரராஜன் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of February 2026.

09.02.2026

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் இன்ஸ்யூரன்ஸ் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து செய்து கொடுத்தேன். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.2 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.3 ஆகு குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–

நான் போலீசார் விசாரணையின்போது கடந்த 05.08.2017 ம் தேதி 11.00 மணியளவில் நானும் லட்சுமணன் என்பவரும் திருவில்லிபுத்தூரிலிருந்து மதுரை

செல்லும் வழியிலுள்ள பட்டத்து அரசியம்மன் கோவில் முன்பாக நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள் என்றும் TN 67 AT 3678 என்ற பதிவெண் கொண்ட Yamaha Razer சிவப்பு நிற வண்டியை பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட வைரமுத்து என்பவர் உருட்டி வந்தார் என்றும் அவருடன் மாரி செல்வம் என்பவரும் சதீஷ்குமார் என்பவரும் வந்தனர் என்றும் அவர்களிடம் சந்தேகத்தின் பேரில் போலீசார் விசாரித்தபோது அவர்கள் உருட்டி வந்த வாகனத்தை திருடி எடுத்து வந்ததாக கூறினார்கள் என்றும் அவர்களை 11.15 மணிக்கு கைது செய்தபோது அவர்கள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் அந்த வண்டியை ஒப்படைத்தார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.395/2019

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.லட்சுமணன் | Occupation | ரியல் எஸ்டேட் தொழில் |
| Father's name | ராமச்சந்திரன் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of February 2026.

09.02.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து செய்து கொடுத்தேன். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து அசாஆ.4 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சியிலுள்ள இரண்டாவது கையெழுத்து அசாஆ.5 ஆகு குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் போலீசார் விசாரணையின்போது கடந்த 05.08.2017 ம் தேதி 11.00 மணியளவில் நானும் குருராகவேந்திரன் என்பவரும் திருவில்லிபுத்தூரிலிருந்து மதுரை

செல்லும் வழியிலுள்ள பட்டத்து அரசியம்மன் கோவில் முன்பாக நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது போலீசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள் என்றும் TN 67 AT 3678 என்ற பதிவெண் கொண்ட Yamaha Razer சிவப்பு நிற வண்டியை பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட வைரமுத்து என்பவர் உருட்டி வந்தார் என்றும் அவருடன் மாரி செல்வம் என்பவரும் சதீஷ்குமார் என்பவரும் வந்தனர் என்றும் அவர்களிடம் சந்தேகத்தின் பேரில் போலீசார் விசாரித்தபோது அவர்கள் உருட்டி வந்த வாகனத்தை திருடி எடுத்து வந்ததாக கூறினார்கள் என்றும் அவர்களை 11.15 மணிக்கு கைது செய்தபோது அவர்கள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் அந்த வண்டியை ஒப்படைத்தார்கள் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.